54 5 4

ஓம்

தத்ஸத்

கடவுளந்தாதி

OFFICE OF THE REGISTRAR OF
5-OCT 1938
MADRAS

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை

இதன் விலை] 1938 [அணா 2

ஓம்

தத்ஸத்

கடவுளந்தாதி

OFFICE OF THE REGISTRAR
5-OCT 1938
MADRAS

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை

1937

இதன் விலை அணா-2.

OFFICE OF THE RE...
5-OCT 1938
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்

கடவுளந்தாதி

கட்டளைக்கலித்துறை

அந்தாதிஞானக்கடவுளந்தாதியையான்றுதிக்க
வந்தாதிசற்குருவான்பொரு ளாய்மகிழ்ந்துள்ளமிர்தம்
விந்தாதிநாதமணிநா வசைத்துவிளங்கநன்னூல்
தந்தார்மெய்ஞ்ஞானக்கண பதியாகியசற்குருவே. ()

இதுவுமது

பரிச்சுழிமீதிற்கயற்சுழி தத்திப்பன்னீரொழுகி
யரிச்சுழிமூலத்திலாடிய சீரந்தரங்கவுண்மை
தரிச்சதுமுத்திரையுட்சுழி வட்டத்தடவிகடக்
கரிச்சுழிவாசித்துதிக்கை விநாயகன்காப்பதுவே. ()

மண்டலமெண்டிசைதெண்டிரை வானமற்றுள்ளவெல்லாம்
குண்டலமென்னுஞ்சிறு மணியாகக்குழைக்கணிந்து
விண்டலமானதலையலங் காரத்தின்மீதிருந்த
புண்டரிகத்திருமாதாபி ராமிசொற்பூரிக்கவே. (1)

பூரித்தசெந்தமிழ்வேதாந்த ஞானப்பொருளறிவிற்
சாரித்தசந்தனம்வாசனை போலித்தமிழ்முரசம்
பாரித்தவானத்தின்மின்னகு மேகம்பனிசுரந்து
மாரித்ததூவல்சொரிவது வாழிந்தமந்திரமே. (2)

மந்திரமானபொருளெழுத் தீரெட்டுமாளிகையாய்த்
தந்திரமானமனையாறு விட்டுத்தலமுமஞ்சா
யந்தரவானத்தனற்புகுங் காலமணுவசையாச்
சுந்தரச்சோதிமடந்தான் முடிந்ததுஞ்சூத்திரமே. (3)

சூத்திரமாகுமிடத்திலீராறுஞ் சுழிபிறந்த
மாத்திரமேரவிசோமனு மாகியுள்வட்டத்துச்சி
நேத்திரமேயோடியண்டகடாக நிறைந்தவொளி
பாத்திரமேசிவசூத்திர மானதும்பாதத்திலே. (4)

பாதத்திலேமனம்பற்றுவர் முற்றுவர்பாசமற்றோர்
நீதத்திலேநிலைபேராமற் சாதிப்பர்சித்துவித்தை
வாதத்திலேபொருளொன் றுகக்காண்பர்மனதுநெறி
நீதத்திலேகுருசொல்லாமற் சொன்னநிறையிதுவே. (5)

நிறையொருசோதனை தட்டான்றராசுநிறுத்துமத்தித்
துறைசுழிவட்டச்சர முனைதூக்கியசூட்சத்திலே
பிறையிருகால்கொம்பு நாதாந்தப்பிஞ்சுபெருத்தசெயல்
கறைமிடற்றெல்லைக்குமேல் வெளிசென்றவர்கண்டுகொள்ளே.

கண்டுகொண்டானந்தக்கூத் தாட்டைநேசக்கருணையினாற்
கொண்டுநின்றோன்பரவீதியிலே குருபாதமென்றுந்
தொண்டுசெய்தந்தத்திருவாடு மூசலிற்றூங்கிக்கொண்டார்
பண்டுமுன்சோதிப்பழம்பொருடோன்றும் பணிந்தவர்க்கே.

பணிந்தவரென்றுஞ்சனன மெடாமற்பரகதிக்கீழ்த்
தணிந்தவர்சென்னிதரிக்கப் பெற்றோர்தம்மைக்கொல்லமனங்

துணிந்தவர்பந்தமு மற்றவர்நீதிச்சுருதிமதி
யணிந்தவர்தாமவர்காண பிறவாநெறியாண்டவரே. (8)

ஆண்டவரானவ ரீரேழுலகத்திலாணிமுத்தா
யீண்டவர்பேரின்பநாத மன்றேயெவ்வுடலுயிரும்
பூண்டவராதியிற்பூருவமா னவர்பொய்கடந்த
தாண்டவர்நீண்டவெளி யொளிதாண்டியசற்குருவே. (9)

சற்குருவென்னும்பொருளெங் தெழுத்துட்சடாட்சரமும்
சொற்குருவென்றுதிருவெட் டெழுத்துஞ்சுழியுமென்று
கற்குருசெம்புக்களிபுக்கும் பூசனைகாட்டுகின்ற
மற்குருமற்றக்குருவென்று சொல்லவும்வாயில்லையே. (10)

இல்லையுண்டென்றுதுதிக்கப் படாதவிடந்தனிலே
சொல்லவிளங்கமணிநாத வோசையிற்றாங்கியகா
லெல்லையிலேசுழிச்சக்கரமா னதுமேய்க்குமுன்னே
தில்லையிலேமனங்கண்ணுட்டம் பார்த்திருஞ்சித்தங்களே. (11)

சித்தங்களானதிருவந்தாங் கத்துச்செச்சையிலே
வைத்துங்கணேசத்தைமாட்டிக்கொள்வீர்வழியொன்றுகண்டா
லொத்துள்களவும்புலைகொலை காமங்களேதுமற்றச்
செத்துங்கிடைமனமேமதி, யூர்ச்சிறுவாசலிலே. (12)

வாசலுங்கோபுரமையமு மண்டபவாவிகளும்
பூசலுந்தாமரைப்பொய் கையுமெய்யும்புருவநடு
வூசலுமத்தளவோசையுந் தீபவொளியுங்கண்டால்
பேசலும்பேசுவரோ யேகபோகத்தின்பேரின்பமே. (13)

இன்பமிருந்தவிடஞ்சுடு காடதெடுத்துரைக்கத்
துன்பம்வெகுதொலைசுற் றிலும்வன்னிதுருவமத்திக்
கம்பமதுநுனிகாணாத காட்சிகனகசபை
விம்பம்பெருவெளியற்றுற்றுப் பார்க்கவிளக்கொளியே. (14)

ஒளியாம்விளக்கொளிக்குள்ளே தெளிந்துகொண்டுருவ
வெளியாம்பராபரமா சோதியேவிந்துநாதமொடு
தெளிவாயிருந்துபிரகாசந் தோற்றுஞ்சிதம்பரத்தி
லழியாவரம்பெற்றிருக்கப் பதமுண்டடியவர்க்கே. (15)

அடியவர்க்கன்புகொடுக்குந் தியாகரனுக்கிரகப்
படியவர்க்கெய்தும்பயனதுவே பற்றிப்பாய்ந்தவுண்மை
வடியவர்க்கேதிறங்கண்டவர் விண்டிலர்பேதமற்ற
முடியவர்க்கேகுடியப்பா னடக்கருமூச்சில்லையே. (16)

மூச்சில்லையேதுமொழிவது மில்லைமுனையொழியப்
பேச்சில்லையம்பலம் பேருருமில்லைபிறந்திறக்க
நீச்சில்லைப்பள்ளநிலையு மங்காச்சதுநின்றநிலை
யாச்சில்லையென்றுசற்றங்கே யிருக்கிறதானந்தமே. (17)

ஆனந்தமானவடிவு சங்காரத்தினுச்சரியந்
தானந்தமானசரணடைந்தோர் சற்றறிந்துமதில்
வானந்தமானவனுபோக மூன்றுமகிழ்ந்துரைப்ப
வானந்தவாறறியேன்யான் செய்தவாய்மதமே. (18)

மதமென்றெனைச்சொல்லவோ வல்லவோமதியுள்ளவர்கட்
கிதமிதமாகவெடுத்துரைத்தா ரின்மைநன்மைபுன்மை

சதமல்லமக்களும்பெண்டிரும் வாழ்வுமுன்ருய்தமரு
நிதமல்லமெய்ப்பொருள் வேறேயிருக்குதுநேசத்திலே. (19)

நேசத்திலேபொருளுண்டென்று பார்த்துநிலைக்கப்பசு
பாசத்திலேநிதம்பட்டுழலாமற் பரதேசவிசு
வாசத்திலேமனம்வைக் கத்தியானம்வளரும்பிர
காசத்திலேகருத்தல்லா லசைவறக்கண்டுகொள்ளே. (20)

கொள்ளும்பொருள்தங்கப் பங்கங்களாகிக்குலையுமது
விள்ளும்புறம்பொசியாம லுள்ளேவெளிகண்டமட்டுந்
தள்ளுந்தனைமறந்தெல்லாத் தலங்களுந்தத்தளிக்கக்
கள்ளுங்குடிக்கவரும் வெறியானந்தக்கள்வெறியே. (21)

வெறியேதுடங்கிநடனங்கள் கண்டுவிழிகுளிர்வ
தறியேனினிச்செல்வ தேதுமுண்டோவள்ளியள்ளித்தரக்
கறியோவறுசுவையோ மாடைக்காசுபொன்வெள்ளிசெம்போ
வுறியேயிருக்குதென்ரு லுன்னிலேனுறிகால்திறந்தே. (22)

திறந்தேயெடுக்கச்செகமாய்கை யோகத்திரைமருட்டு
மறந்தேவிடுவஞ்சகமே மலையதிலேறவென்ருற்
பறந்தேவிழவருமோ பஞ்சபூதச்சுரையுங்கண்டே
யிறந்தேயெடுக்கவல்லாற்கல்லவோ வெய்தும்வான்சுவையே. ()

சுவையொளியோசையு நாதமுமன்றிச்சுழியினின்று
கவையறப்பொன்னகர் மின்னகத்தேகமென்ராய்மையதா
யவையவங்கெட்டுப் பதைபதையாமலளக்குமந்தச்
சவைநடுக்கண்டுதெளிவோர்க்கு ஞானமுஞ்சாதகமே. (24)

சாதகமென்னுஞ்சிவஞான பூரணந்தன்னிடத்திற்
போதகமானவருளிருக்கப் பொருள்வேறெனவே
பேதகமாகத்திரிந்துழன் றெங்கும்பிதற்றும்பொய்யிற்
சோதகமொன்றுமறியாமன் மாய்கின்றதொல்பவரே. (25)

தொல்பவஞ்சொல்லத்தொலை யாதபாதகத்துன்பத்தி
வல்லபங்கண்டுதெளிவது ஞானவழியெறும்பு
செல்லவும்பாதைசிறு தாரையாகுந்தினந்தினமு
மெல்லவுந்தானடந்தன்றன்றுஞ் சாதிப்பர்மெய்யன்பரே. (26)

அன்பருக்கன்புதரும்பரஞ் சோதியையாத்துமத்தோ
டென்புருகக்கலந்துள்ளே யுருகியிரவுபகல்
தம்புருவீணைசரமண்டலத் தொனிகாளந்தித்தி
மின்பெருகுங்கொலுச்சிங்காரங் கண்டிருமெய்மகிழ்ந்தே. (27)

மகிழ்ந்தேயிருக்கத்திருவருட் பாலுண்டுவஞ்சமறப்
புகழ்ந்தேயிருக்கச்சிவஞான பேரின்பம்பூருவமாய்ச்
சுகந்திருக்கவமுதுண்ணும லுண்டுசுகிக்கவிந்தச்
சகந்தானருந்தும்படும்பெருந் துன்பங்கள்சாற்றரிதே. (28)

அரிதேயிவ்வஞ்சத்தவாழ்வை மறப்பதற்காசையென்ருற்
பெரிதேமனம்புத்தியாண வங்காமியப்பேய்பிடித்துத்
திரிதேபஞ்சாக்ஷரத் தீமூட்டிபூமித்திரணமதாய்க்
கரிதேபரிதளச்சேனையும் பட்டறக்கைவிட்டதே. (29)

விட்டதுமால்கையுருவே மெய்ஞ்ஞானவிளக்கொளியிற்
பட்டதஞ்ஞானவிரு ளிறந்தோடிப்பகலிடமாய்த்

தொட்டதவ்வுச்சிச்சுழி வழியேறிச்சொருகியொன்ருய்
வட்டமுமொத்ததப்பான் மதிதாளுருமாறிநின்றே. (30)

மாறிநின்ருயடிவான்பொரு ளாணிமணியசைந்து
மீறிநின்ருனந்தநிர்த்தத்தி லோசைவிளங்கமனந்
தேறிநின்ருற்பரனுலாம் பதமென்னுந்தேனதுவே
மூறிநின்றின்பரசந் திருவாய்திறந்துண்பவர்க்கே. (31)

அவர்க்கேபரமென்றிருத் திக்கொண்டாசனமக்ஷரத்தா
லிவர்க்கெம்பிரானைத் தெரியாதிறுக்கியிருக்குமனு
பவர்க்கேயெழுத்தெட்டி னட்டாக்ஷரத்தின்பஞ்சாட்சரமுந்
துவர்க்காத்ஞானமுந்தானே துலங்குஞ்சுழுத்தியிலே. (32)

சுழுத்தியின்மேலொரு சாக்கிரதமாயதிற்சொற்பனமா
யழுத்தியநாபிக்கமலத் துரியத்ததீதத்திலே
வழுத்தியநாடிசுழி சுழித்துச்சிவழிதிறந்து
விழித்தவழியசையாதேயிரு மெவ்வெளியுண்ணுமே. (33)

உண்ணுங்கதிர்மதிகாலங்கி மூட்டியுருகவெண்ணெ
யெண்ணிங்கசிந்திடச் சிற்றாறல்பாயவிடைநடுவே
கண்ணுங்கருத்துந்துயிலா திருந்திருகால்திறந்து
விண்ணும்பரவெளியூடே கலந்துவிரவுவரே. (34)

விரவுவர்தேகமெடுத்து மெடாமல்வினையிதன்றே
பரவுவர்மேடதுபள்ள மில்லாமறப்பல்காலுமுன
நிரவுவராசைநிராசையதாக நிர்த்தூளிசெய்தே
வரவரக்கண்டுகண்டாகாச மேறுவர்மாதவரே. (35)

மாதவர்சோதிவடிவா முலகத்தின்மக்களுக்கு
மாதவன்போற்பிரகாசமு மாவருளடங்குந்
தூதுவர்தேசிகர்தாசானு தாசர்க்குந்தொண்டுசெய்ய
வேதவராயிருப்பார் திருமேனிகண்பூத்திடவே. (36)

பூத்திடுஞ்சென்னியிலாகாசங் கோத்துடல்பூரணத்திற்
பார்த்திடுஞ்ஞானக்கண் பார்வையிடாப்பரிபூரணத்திற்
சேர்த்திடுங்காசிச்சிதம்பரத் தெல்லைத்தெருநடுவே
யேத்தியுந்தம்பித்துக்கம்பித்து வாசியுமெய்ப்பறவே. (37)

எய்ப்பற்றொருவனுக்குண்டே முகப்பிலிறந்துமனக்
கற்பத்தடிமுடிக்கார்கம்ப நாட்டிக்கவாடமதி
லொப்பற்றவாசலுக்கிப்பா லிருந்தங்கொருபடிகற்
செப்பைத்திறந்துகொண்டாற் றவமேசிவபாக்கியமே. (38)

பாக்கியமென்கின்ற பஞ்சாக்ஷரமுப்பாலுடனே
யாக்கியசற்குருவேதாந்தச் சீனியருள்பெருகித்
தாக்கியவக்கினிமுக்கோணவீட்டிற் சமைத்துவைத்துத்
தூக்கியிருக்குதுமந்திர வான்மதிசூக்ஷத்திலே. (39)

சூட்சத்திலேகருச்சொல்வாரு மில்லினிச்சொல்லவென்றன்
மோட்சத்துக்கர்கிவாத் தக்கதன்றிமூலக்குத்தண்ணீர்
பாச்சப்பலன்பெறவில்லாமற்போன துபாரிலுண்டோ
காச்சப்பழுத்திடுபொன்போல்வாவரக்காண்பதுமே. (40)

காண்பதுங்கேட்பதுங்கையிட்டுச்செய்வதுங்காசினியிற்
பூண்பதுந்தீவினையொப்பல்லவேபுலன்வேறறவே

யாண்பெண்ணிருவினையில்லா தொழிந்துபெண்ணாசையற்றால்
வீண்பருக்கேதுரைப்பே னுரையேனந்தமெய்ப்பொருளே. ()

மெய்ப்பொருளுச்சிக்கு ளுச்சிதமாகவிருக்குமப்பா
வைப்பினின்மாணிக்கப் பொக்கிஷமேமணிமாமகுடச்
செப்புக்குள்ளேற்றுந் திருவிளக்குள்ளொளிதீபமது
கைப்பொருடன்னினு மெய்ப்பொருளாமதுகண்டவர்க்கே.(42)

கண்டவருள்ளந்தெரியாது வாசனைகாட்டுமல்லால்
விண்டவரேதும்விளம்புவரோ விண்ணிற்பார்வைநிதங்
கொண்டவர்கொள்கை குறித்ததுநேசங்குறிதவரூப்
பண்டவர்கண்டபடியா யிருப்பார்பதைப்பறவே. (43)

பதைப்பற்றேகத்துக்கேதொன்று மற்றவர்பாசங்கெட்டு
விதப்பற்றைத்தூரறவெட்டத் தீமூட்டிவிரவியொளி
யதைப்பற்றிமூலத்தறைதுறை விம்மியடங்கியொன்றாய்
மதப்பித்தைவிட்டெற்றிந்தெட்டாப்பதஞ்சென் றுவாழ்பவரே.()

வாழ்பவர்செல்வமகிழ்ச்சி யுள்ளானந்தமாமதியூ
ராழ்குவராயிரத்தெட்டா மிதழிலமுதமுண்டு
மூழ்குவரானைமணித்திருநாத முகப்பிற்சென்னி
தாழ்குவர்சோதிப்ரகாசத்திலே யொன்றிச்சார்ந்துகொண்டே.

சார்ந்துகொண்டுச்சியைவிட் டசையாச்சச்சிதானந்தத்தே
ரூர்ந்துகொண்டர்தத்தெருவு குளங்கணேடுமதி
தேய்ந்துவளர்ந்துரு வட்டமுமாகத்தெளிவதுபோ
லாய்ந்துகுலங்கெட்டெழுந்ததிற் றூங்கியவாசனமே. (46)

ஆசனமானதரி யாசனத்திலகாமுதற்
பேசினராசியமாறி வொன்றுமதுபேச்சரியா
மோசனமானது தேடாமறறேடுமுதலுமது
தேசனந்தேசியுமொன்றாய் நிறைந்துசிவமதுவே. (47)

சிவமதுமுப்பத்துமுக்கோடி தேவர்செய்யுமொரு
தவமதுபொன்னகர்மின்னனே தாமரைத்தாள்பணியப்
பவமறுஞ்சூக்ஷத்திற் பத்தியும்பாயும்பவமிருந்த
நவமணிமண்டபமேடையுங் காணுவர்நாட்டத்திலே. (48)

நாட்டத்திலேவிழிநாவசையாத சொன்னுதமணி
யாட்டத்திலேகருத்தங்கே யுருகியருள்பொசியு
மோட்டத்திலேவருமூறலே யுண்டுணர்வாய்ந்ததிருக்
கூட்டத்திலேபிருமேகாந்த பூரணகும்பத்திலே. (49)

கும்பத்திலேதிரு நாதமுண்டாக்கிக்குவிந்தமனக்
கம்பத்திலேதுளையஞ்சுரு வாணிக்கடைந்தெடுத்த
ரம்பத்திலேமுனைகொண்டே திருக்கரநாட்டிவைத்த
தம்பத்திலேசுழிவட்டமிட் டாடியசக்கரமே. (50)

சக்கரமெட்டுஞ்சுழியிரண்டு மாகிச்சதாசிவனு
ரக்கரமெட்டதில்ாடிக் கொண்டாலதற்குப்புறத்தே
நிட்களமானவந்நிராமயச் சோதிநிறைந்தநம்மிற்
சிக்கத்துதிக்குந்தெரியா தெவர்க்குஞ்சிலம்பொலியே. (51)

சிலம்பொலியப்புறமிப்பாற் சிலம்பொலிதேவர்சபை
யலம்பொலியோசைய வெகுநாதமதற்குமப்பால்

வலம்புரிசுத்தியவாசலு முச்சிவழிதெரிந்தாற்
புலம்பொலியாடலும் பாடலுமாகியபூரணமே. (52)

பூரணம்பூத்தகருப் புருவத்திடைபொங்கிப்பொங்கும்
காரணம்பார்க்கவுங்காரணமே கண்மணியினுள்ளே
நீரணங்கேறிமலைமேல் விளக்குடனெய்யுமிட்டுத்
தோரணங்கட்டியகாலிட்டுத் தூண்டுஞ்சுழிமுனையே. (53)

சுழிமுனைவட்டச்சுழிமுனை யுச்சித்துவாரத்திலே
வழிபயமென்றுமலைப்பார்களோ மடைக்கொக்கதுபோற்
றெளிவுறுபார்வையசையாது சிந்தனைதூக்கிநின்று
விழியிமையாதொளிபார்த் தூடுருவவெளிப்படுமே. (54)

வெளிப்படுமுட்சுழிநச்சர வுச்சிவிடம்பிறக்க
வழிப்படுதத்துவமெல்லா மிறக்குமறந்துருக்கெட்
டொழிப்படுஞ்செந்தீச்சுடர்பூத்துக் காட்டியிங்குள்ளழைத்த
சுழிப்படுஞ்சக்கரத்தாணி வலமிடஞ்சுற்றுகவே. (55)

சுற்றியராட்டினச்சுற்றது போலச்சுழுத்திநடு
மத்தியினின்றுயர்கான் மாறிக்கொண்டுமகுடாந்தப்
பத்தியிற்சென்றுபகலிற வற்றப்பதிபுகுந்து
சத்தியிற்சித்துவிளையாடுங் கூத்துத்தனித்தனியே. (56)

தனியேநடனம்புரிகின்ற கூத்துச்சகலகலைத்
தொனியேபிறக்கப் பிரசண்டமாகச்சுயம்புலிங்கக்
கனியேபழுத்துக்கனிந்த முதூரல்கசிந்துவரும்
பனியேபருப்பதமோராகந் தோன்றும்பரையிடத்தே. (57)

பரையிடத்தேயுருத்தோன்றி யொடுங்கும்படியறிந்தோர்
புரையறக்கிறிப்புண்ணுற்றுவரோ புத்திபத்தியிலே
திரையறநாசத்திசைதிசை யாறித்திருக்கறுக்க
வரைதிருமாமலைக்குறப் பெண்கொடிவாய்த்திடுமே. (58)

வாய்ந்ததுசந்திரவட்டத்தி லேதிட்டிவாசலது
சாய்த்ததுமங்கைதன்கொங்கையின் கொங்கைக்கண்ணீர்ததும்
தோய்த்ததுதீர்த்தத்துறையிலங் நீர்த்துளிதுள்ளிவிழக் [பித்
காய்த்ததும்ஓநமவென்று பஞ்சாக்ஷரக்காயதுவே. (59)

காயதுகாய்த்துப்பிரபஞ்சக் கோப்பிற்கலந்துகொத்தாய்
மாயுதுபாருங்கள்வையகத்தே மண்ணுவிண்முதலாய்
பேயதுபூதப்பெரும்பேய் பிடித்திடப்பிஞ்சுதிர்ந்து
போயதுசாகுதுகாண் போகபாக்கியப்புண்சுவையே. (60)

புண்சுவைக்கேமனம்புண்ணு யுடைந்துபொருமிவிம்மிக்
கண்செவியாற்றெறிகன்மங்க ளேற்றுக்கருத்துங்கெட்டுப்
பெண்சுவையென்னும்பெரும் பாசமாய்க்கைப்பிடித்தவர்க்கு
விண்சுவைவகைப்படுமோ பஞ்சபாதகவீண்மருக்கே. (61)

வீண்மருக்கெத்தனைசொன்னலும் பொய்யாதுமெய்யென்றெண்ணர்
மாண்மருக்கும்பொருளாவ துண்டோமதுவுண்டுவெறி
காண்பரைக்கும்பிட்டுக் கல்லைபுஞ்செம்பையுங்கைதொழுது
பூண்பவர்பாதகபூதலத் தொல்லைபிடித்தவரே. (62)

பிடித்தவர்சேத்துமத்தீப் போலுழன்றுபிடித்தவெறி
பிடித்துசேற்றினிருட்டிய கம்பம்பிடித்துழன்று

குடித்தவர்சங்கிலிக் கூட்டுக்குணமுந்தப்பி
மடித்தவர்புத்தியும்வாணுளுங் கூற்றுக்குவாய்த்தனவே. (63)

வாய்த்தொருகூற்றுவன் வாணுளைக்கொண்டுயிர்வாங்கவந்தா
லாய்த்தொருவார்த்தைசொன்ஞலும் விடேனினிகொட்டிற்செ
மூத்தையைச்சாம்பலையொவ்வாதகாயத்தையொப்புவிக்க [ல்லு
சோற்றையிட்டேன்வளர்ப்பேன் துறப்பேன்மலப்பாண்டத்தையே. ()

பாண்டத்தையேசுமப்பேன் பஞ்சபூதப்பனைமுறிந்த
காண்டத்தைத்தீயுண்ணும் கட்டியைச்சுட்டகரிவிறகை [து
மாண்டற்றுபோம்பொய்யை மாயமின்கூட்டை வளர்த்தெடுத்
மூண்டற்றுக்கைவிட்டசூத்திர நூலின்முறுக்கினனே. (65)

முறுக்கதுசுற்றிவங் தேருறும்போதுமுடிசுழன்று
கிறுக்கிறெனத்தனையே கெட்டுச்சாயுங்கிலேசமதை
வெறுக்கமருந்திலையோ திருவண்ணுமலைவிளக்கைத்
திறக்கத்திருவிளக்காலே தெரியுந்திருவுளமே. (66)

திருவுளமுண்டென்றிருக்கத் திருவுளஞ்செய்வதல்லாற்
றிருவுளஞ்செய்வதுவேறுமுண்டோ திரிலோகமெல்லாம்
வெருவுளமானகுணங்கெட் டறிவுவிளங்கச்சித்தி
தருகவதியாப்பொருளாக வந்திடுந்தற்பரமே. (67)

தற்பரமானசரணுரவிந்தச் சபையறியக்
கற்பதுமூன்றுரைசெய் வதுமில்லைகேட்டறியா
வுற்பனந்தன்னைத்தெளியத் தெளிவிலுருகியுருச்
சொற்பனவிற்பனமாய்த்தோன்றுமே சுடர்க்காற்கொழுந்தே.()

கொழுந்துதிரண்டுண்டண்டத் தடிமுறியக்கொம்புசுற்றி
வளர்ந்ததந்துபஞ்சவடிவாய்த் தழைந்தமதியறைமே
லெழுந்தப்ரகாசவொளி தன்னிலிருளடக்கிக்
கொழுந்துவகிர்ந்திருள் தீபத்துளொன்றியகூறறியே. (69)

கூறறியாத்தற்பரமான ஞானமுங்கூறறிந்து
தேறறியாப்பரத்தேறுவரோ திருக்கூற்றினது
வாறறியாதற்பர்சாம்பலைப் பூசிமணிகளெண்ணிப்
பேறறியாமலிருந்துங் கண்மூடியபித்தர்களே. (70)

பித்தர்களானபிரபஞ்ச மாய்கையின்பேய்பிடித்த
பித்தர்களானவர்பித்தர்களே பிரபஞ்சவாசமில்லாச்
சுத்தர்களானபரிசுத்த ரானவர்சோதிபதி
சித்தர்கள்பித்தரென்றே செப்பலாம்பரதேசிகட்கே. (71)

தேசிகரென்னுங்குருலிங்கமூர்த்தி யென்சிந்தையின்மேல்
வாசியிலேறியிடம்வலஞ் சுற்றியுள்வட்டத்திலே
பேசியதாரறிவாரறிந்தோர் தம்புரம்பொசியா
ராசியுமாமல்லவோநாம தேகமில்லாதத்திலே. (72)

இல்லாதபாழதிலேயொரு நாமமெடுத்துரைக்கச்
சொல்லாதபோதொருசொல் வருமோதுதியாதரிய
வல்லாரொருவருண்டானு லவர்களிம்மாநிலத்திற்
செல்லாதிருப்பார்கள்பார் தேகசூட்சுமதேகத்திலே. (73)

தேகத்திலேபிரகாசத்தை யேற்றித்தெளியசிவ
யோகத்திலேமனமேலான மாகனவுற்பனஞ்செய்

தாகத்திலேவரு மூறனுயுண்டுசகலகலை
ராகத்திலேகருத்தொன்ருக நிற்கின்றநல்லவரே. (74)

நல்லவர்மேலவர்நாலாம் பதம்பெற்றநாயனவர்
சொல்லவரோகைமணித்திரு நாதத்தொனியதுகா
ணெல்லவர்க்கும்மதுகிட்டாது தேகமெடுத்துமெடா
தல்லவர்க்கிந்தவழி சற்றறிவதகப்பொருளே. (75)

அகப்பொருளொன்றுமுடியா யிருக்குதவிழ்த்தெடுக்க
செகப்பெருமாயை யிருளது மூட்டுந்திறைதிறக்க
மிகச்சிறுதுன்பவினை த் திருக்கானவிலங்கைவெட்டித்
தகத்தெடுத்தாற்பொருள்கை மேலிருக்கிறதுசத்தியமே. (76)

சத்தியஞ்சத்தியமெய்யிது வேறில்லைதற்பரத்தே
ரித்தியமுண்டுபசியிளைப் பாறநிழலுமுண்டு
சுற்றியமும்மலஞ்சுட்டது வட்டச்சுழியுமுண்டு
மத்தியிலந்தச்சிறுதாரை யூடுவழிநடப்பே. (77)

நடப்பதுமார்க்கமறிந் தறியாயனடப்பதிலே
கடப்பதுவேறுகவர் விலக்கில்லைகவர்நுனையி
லுடப்படநெஞ்சுறு தீரக்கமறுபுறமுன்னிநட
தடப்படவாசல்திறக்குங் கபாடந்திருக்கறுமே. (78)

திருக்கறுகின்றதிரிபுரத் தாணிகயன்றேகவினை
கருக்கறுக்கக்கருக்கெட் டதுவேகமலாலயத்தின்
குருத்திருக்கக்கருத்தெங்கே யருகக்கொழுந்துவிட்டுப்
பெருக்கப்பெருக்கவன்றோ வட்டமாமதிபேரின்பமே. (79)

பேரின்பஞ்சிற்றின்பமிரண்டு மொன்ருகப்பிடித்தவர்க்கு
மோரின்பமானதிரண்டின்பமோ வின்பமொன்றதுகேள்
தூரின்பம்வேறின்பங்காய்கனி யூண்வகைச்சொல்லின்பமு
மாரின்பமொன்றுரைப்பே னப்பனேயொப்பிலாதவனே. (80)

ஆதவனேயொப்பிலாரு மில்லாதவதீதபர
மாதவனேகுருதேசிகனே வடிவொன்றுமில்லா
நீதவனேமுற்றுமீரேழு லோகநிறைந்ததிரு
நாதவனேயினிநானில்லைநீயில்லை ரண்டுங்கெட்டே. (81)

கெட்டதிச்சாம்பலுக் கற்றதுபாசங்கெடாதுகொள்ளி
சுட்டதுகண்டப்பொருந்தும் புகையெழச்சூக்குமத்தாற்
றெட்டள்ளுஞ்சாம்பலையிட் டெங்கும்பூசவுந்தூயவெள்ளை
பட்டதுசெவ்வைகண்டீர் பார்க்கவேறில்லைபால்வடிவே. (82)

பால்வடிவாகியபாதத்தைப் பற்றிப்பதைப்பறவே
நூல்வழியேணிப்படியேறிப் போய்வரநோக்கிப்பின்னே
காலதுகாலடிபேராமற் பார்த்துக்கடந்துமுப்பாழ்
மேல்வெளிபார்த்திருப்பீரந்த மின்னொளியே. (83)

மின்னொளியென்றொரு மின்மினியானதுமேதினியிற்
றன்னொளிகண்ணுண்மறக்கத் திறக்கத்தவம்பெற்றதே
வென்னொளிதன்னுக்குட் காணுமலிப்படியேனிருந்தே
னுன்னொளியாகிபாதமென் னுள்ளத்திலுச்சியிலே. (84)

உச்சியிருபாதத்தைமேற்றி யங்கோர்படியா
யச்சியிலேக்குருநாதாந்த ரத்நச்சிரோமணியா

கச்சியிலேபதிதானுப்புகுந்து கலந்தமிர்த
வச்சியிலேவருவாரறிந்தே னினியானில்லையே. (85)

யானில்லைவேறினியைம்பத்தோ ரக்ஷரத்தாணியச்சுத்
தானில்லைலோகசராசரமில்லை சகலமெல்லாம்
வானில்லையண்டமடுக்கில்லை வாரிதிமற்றுமொரு
தேனில்லையூனில்லைபாரீர் பராபரச்சித்திரமே. (86)

சித்திரம்போலுருத்தானசை யாத்திசைக்கம்பமது
பத்திரமுத்திரத்துணதுபார் பஞ்சமிர்தமுள்ள
சத்திரவீடதுபெற்றவரிப்படித் தன்னறிவான்
மித்திரமில்லைதெரியாதடிமைசெய் விண்ணப்பமே. (87)

விண்ணப்பமெய்ப்பதஞ்சீர்பாதம் விண்ணப்பம்வித்வசன
மெண்ணப்பரப்பர்சொல் லேகாக்ஷரத்திலிருந்தெடுத்துக்
கண்ணப்பரப்பர்சொன்மாணிக்கர் சுந்தரர்காக்ஷிபெற்ற
சண்ணப்பவெண்மையினீருகத் தாக்கியசுத்தமிதே. (88)

சுத்தமிதென்றுமுருக்கத் திருந்தவதுய்யவெண்மை
யத்தமெய்ஞ்ஞானிகள் சித்தமதாகுமப்பாலுக்கப்பா
னிந்தமதாகியழியா வியல்பினுநிட்களத்தே
சத்தமதாகியநாதாந்த விந்துவின்சன்னமிதே. (89)

சன்னமுமில்லைபெண்டாய் தந்தையில்லைதனித்திருந்தால்
வின்னமுமில்லைவெளியிற் பயமில்லைவிட்டகுறை
யின்னமுமில்லையுளத்து நிற்பார்க்கிறப்புமறும்
வன்னமுமில்லையப்பாற்சொல்லப் பேச்சில்லைவாய்திறந்தே. ()

வாய்திறந்தேனென்றுசொல்ல வுநோவுமனச்சாக்ஷிதன்னை
நாய்திறந்தாலதுமூடறியாது நஞ்சுடர்போ
லாயிரந்துவுள்ளமொடுங்கியடங்கி யசைந்ததுவாய்
நீயிறந்தாலறிவாய்நெஞ்சமே யேதுநீச்சில்லையே. (91)

நீச்சில்லையப்புறம்போய் பரவில்லைநிலைப்பதிலே
பேச்சில்லையந்தரந்தில்லை வனத்துறைபேசப்பெரு
மூச்சில்லைத்தாரையிலொத்துடன் தித்திமுழங்கச்சங்கு
கீச்சில்லைநம்மென்றசத்தமுங் கேள்வியிராகமுமே. (92)

இராகம்பதினெட்டுமொன்றும் நடனம்புரியச்சத்த
லோகமீரேழுமொருநொடிச் சற்றுநுணுக்கமது
வேகமதுவித்ததொய்தமத் தொய்தவிகசிதமா
யேகமதாயணுரூபாதிரூப மெடுக்கின்றதே. (93)

எடுத்ததுறைமுறையாராய்ந்து முன்னங்கிருந்தபடித்
தொடுத்துவிடையறச் சோதித்தறையச்சுற்றறுத்துக்
கெடுத்துமனம்புத்தியாங்காரம் போக்கிக்கிழங்கெடுத்தே
யடுத்துப்பதைப்பறக்கண்டு கொண்டாலதுகைவருமே. (94)

கைவருமானந்தவெள்ளம்பெருகிக் கருணையின்பான்
மெய்வரும்பொய்யறும்வேதாந்தத் துண்மைவிளங்கவரு
மைவரும்பட்டுத்தெருவெளியாயிற் றறுத்தடைத்த
பைவுறுங்கூறுவிளங்கும் பரிபதபாகமிதே. (95)

பாகம்பதிபசுபாசமு மூன்றும்பகுத்தறியத்
தேகமேபாடாசைபசுபாச மாமதுதேர்ந்தசிவ

யோகமெய்ஞ்ஞானம்பதியென் றுணர்ந்தங்கொடுக்கவல்லார்க்
கேகமதாகவருங் குருபாதமிருபதமே. (96)

இருமிருங்கண்டத்தைக் கண்டுகொண்டே றமிருக்கையிலே
வருவதும்போவதறிந்துகொள்வீர் வழிகண்டுகொண்டா
லருவுருவில்லையவ்வண்டமடுக்கில்லை யாண்பெணில்லை
துருவரும்பெருவழிகாண்டுணிந் தேறச்சுழல்கின்றையே. (97)

சுழல்கின்றவாயுவைப் பூரித்துவிம்மித்துருத்திபின்வாய்க்
கழல்கின்றவொன்பதுவாசலும் பூட்டிக்கனையடுப்புத்
தழலதைமூட்டியொருசுடரேற்றச் சமாதிநிட்டைக்
குழல்வழிமுத்திரையூடேறிக்குறுகக் குறிதைக்குமே. (98)

தைக்குங்குறியதைவிட்டுவிட்டாய் தன்னொளியின்மனம்
வைக்கும்பிடித்துவராதிருப்பீர் வட்டமானகுறி
கைக்குமெய்யானதுகாட்டும் பலன்பெருங்கவ்வையில்லை
மெய்க்குமெய்யானது பொய்க்குப்பொய்யாமன்றிவேறில்லை. ()

வேறில்லையெங்கும்விடிவது பார்க்கவும்வெட்டவெளி
தூறில்லையேதுந்துதிப்பதற் கொன்றில்லைசுட்டொழியுங்
கூறில்லைசாம்பற்குருவுக்கு நீறுகுறித்துவைத்தும்
பேறில்லையந்தத்திற் பேச்சுவேறாகிப்பிறந்திடுமே. (100)

பிறந்திடும்பேச்சுத் திருந்தப்புரமென்றுபேசுவபின்
மறந்திடுந்துன்பத்தைவிட்டது போகமதிபெருகிச்
சிறந்திடுமின்பந் திருக்குருபாதந்தெரிசனையா
மிறந்திடுமாய்கையறிந்திடுநேசத்தி லென்றைக்குமே. (101)

என்றைக்குமிப்படி யொன்றுகக்கண்மேகமற
மன்றைக்குமிப்படித்தானுய்முடியு மமைத்தபடி
யொன்றைக்குகொண்டரையுபசரித்தூட்டி யுழக்கிவைக்கு
மின்றைக்குந்தானவனுளைக்குந் தானவனெப்படியே. (102)

எப்படியென்றுமலைக்கப்பொறிக ளிசைப்பசையிற்
கைப்பிடியாய்ப்புலன்கட்டுமென்றே கடையாணிதச்சன்
சொற்படிசூட்சுமக்கயிறதைத் தூண்டச்சுழித்திரையிற்
செப்படிவித்தையுந்தப்பறைப் பேச்சுந்தெரிகின்றதே. (103)

தெரிகின்றமாய்கைமலைக்கின்ற பாரைத்திரையினுள்ளே
திரிகின்றதற்குக்குதிக்குங்குதித்து மிதாதையென்று
பரிகின்றசித்தரவித்தாரமார்பல னுள்ளறிவில்
விரிகின்றசூக்ஷத்தைவித்தார மென்றுவிளம்பினனே. (104)

விளம்பினனெங்தெழுத்தெட்டெழுத் தொன்றைவிதையதுவா
வளம்பெறச்சோறுதெளிய விரைத்துவளர்முளைதா
னிளம்பயிராகிவிளைந்தகதிரை யிருந்துகொய்து
களம்பொலிதூற்றிப்படிமரக்கால்தொகைக்கண்டதுவே. (105)

கண்டதொகையதுசொல்லாமற் கட்டிக்களஞ்சியஞ்சேர்
நின்றதல்லாற்பிறர்க்கீவதுமில்லை நிறைந்தசெம்ம
லின்றதுநிற்கவொன்றில்லாமற் சற்றுமிடையறவே
மண்டதுசோதிப்பழையமுத லென்றும்பாடினனே. (106)

பாடினஞானக்கடவுளந்தாதி படிக்கவென்றே
தேடின்சற்குருவானதன்றே செகப்பேய்பிடித்தே

யாடினமூடர்க்குக்கிட்டாத ஞானமதீதமதிற்
கூடினபுண்ணியவான்களையே ப்ரம்மங்கூப்பிடுமே. (107)

கூப்பிடுமாதிக்கடவுளந்தாதி குருமொழியாற்
காப்பிடும்போதுகணபதியோர் பத்துகாப்பெனவே
மேற்பொருண்ஞானக்கனிபறித் துண்ணவிரும்பினபேர்
சாப்பிடும்வேதருசியாக்கி வைக்கின்றதத்துவமே. (108)

தத்துவமென்னுஞ்சபை யலங்காரத்தலைமுடிமேன்
முத்துபவளமுழு நீலராகமுளைத்தபச்சை
கொத்துமரகதமாணிக்கம் வச்சிரங்கோகனகம்
பத்துமணிக்குமொருமணி நூலெனப்பாடினனே. (109)

பாடின துட்பொருளாகமந் தொட்டுப்பரத்தையுற்றுச்
சூடினதென்பதுமற்புதமே சுத்தவெள்ளையதாய்
நாடினகூத்துக்கிடமாகக் கீழேநடனசபை
தேடினமன்னுயிர் தன்னுயிராகித்தெளிவதற்கே. (110)

தெளிவதற்கும்பரந்தானுக முன்னிற்கச்சேர்ந்தவர்க்கு
மழிவதற்குத்திருக்கண் கண்டகாட்சிகனகசபைக்
கழுவதற்குத்திருக்கண்ட காட்சிகனகசபை
மொழிவதற்குச்செவிகேட்டிரு சத்தமுழக்கத்தையே. (111)

முழக்கத்தைக்கேட்டந்தமுத்தியைச் சேரநன்மோக்ஷத்திலே
பழக்கத்திற்கிந்தக்கடவுளந் தாதியைப்பார்த்துமன
விளக்கத்தையார்ந்துதெளிவோர்க்கு ஞானம்வெளிப்படுமென்
றளக்கத்துணிந்தகடவுளர் பாதத்தருந்தவமே. (112)

அருந்தவமானபராபாதத் தின்பத்திலத்துவிதம்
பெருந்தவமான கடவுளந்தாதிபிறந்தபலன்
வருந்தவமானசெம்பொன்னழகுவுண்மை மருமகனுக்குத்
தருந்தவமானகடவுண் முன்னின்றுதந்ததுவே. (113)

தந்துவஞானக் கடவுளந்தாதியைச்சாற்றுதற்கு
வந்ததுவீரையழகு மகிபன்வரத்திலொளி
மைந்தனெனவந்தெமம்பிகை பாதத்தைவாழ்த்திநெஞ்சிற்
செந்தமிழ்கூறியவாக்குத் திருவுளஞ்செப்பியதே. (114)

விருத்தம்

கற்றவமுடையாள்வையைநதிவளரழகுபோதம்
பெற்றசீர்வரத்தில்வந்தபிரபலன்கூரியவாக்கின்
முற்றுவப்பெரியஞானமொழிந்ததுகடாக்ஷமாகக்
கற்றவர்பெற்றபாதங்கடவுளந்தாதிதானே. (115)

கடவுளந்தாதி

முற்றிற்று.

பூமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1937.

அருணகிரிநாதர் அருளிய

திருப்புகழ்

விருத்தியுரை

'திருப்புகழ்' முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவியும் வல்லவரும், மெய்ஞ்ஞானானுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாதரால் அருளிச்செய்யப்பட்ட மிகச் சிறந்த நூலென்பது யாவரும் அறிந்ததொன்று. அது செந்தமிழ் இலக்கியச்செறிவும் இலக்கண வமைதியும் சாத்திரப் பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உளது. அன்றியும் சந்தப்பாட்டாதலின் அதன் இன்பம் நோக்கிச் சொற்கள் திரித்தும் பெய்துரைக்கப் பட்டுள்ளன. அல்லதூஉம் பாட்டுக்கள் பல பாடபேதங்களோடும் ஆங்காங்குச் சிதைந்து பொருள் புலப்படாநிலையிற் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடினவேலையென்பது எல்லாருக்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுதி அச்சிடவேண்டுமென்று எண்ணி முதல் 100-பாடல்களுக்கு சென்னைப் பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியரும், செந்தமிழ்ச்செல்வி பத்திராசிரியரும், பாவலராற்றுப்படை - புலவர்கதை - இராஜராஜன் முதலியவற்றின் நூலாசிரியருமாகிய திருவாளர் - மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், சொல்நயம் பொருணயங்களை விளக்கியும், பொருளை ஒழுங்குபடுத்தித் தூய்மைசெய்து எழுதப்பெற்று சுத்தப்பிரதியாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

விலை ரூபா 1-8-0

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.